# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
முறையீட்டு மனு எண். 048/2018
ஆணை எண். நாள் 09–07–2018

********

திருமதி. ச. கல்பனா,
9/2/46, நடுத்தெரு அக்ரஹாரம்,
வத்தலகுண்டு,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம் – 624 202. —— முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வத்தலகுண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். ——எதிர் மனுதாரர்.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வத்தலகுண்டு பேரூராட்சி, 9/2/46, நடுத்தெரு அக்ரஹாரம், தெருவில் வசிக்கும் திருமதி. ச. கல்பனா, தனது 21.02.2018ம் நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 23.02.2018 அன்று சமர்ப்பித்துள்ளார். மேற்படி புகார் மனு எண்.48/2018 என எண்ணிடப்பட்டது. புகார் மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திருமதி ச.கல்பனா தனது முறையீட்டு மனுவில் தனது வீட்டு கதவு எண்கள் 9.2.46A/1C மற்றும் 9.2.46/1D ஆகியவற்றிற்கு தான் வீட்டு வரித் தொகையினை வங்கி வரைவோலையாக செலுத்தியுள்ளதாகவும் அதற்கான அசல் இரசீதினை வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் வழங்கவில்லை எனவும் தனக்கு அசல் ரசீதினை பெற்றுத் தரக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 22.03.2018ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 494/2016/அ.3/நாள். 17.04.2018ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

வீட்டு வரி அசல் ரசீதுகோரி புகார் செய்துள்ள முறையீட்டு மனுதாரர் திருமதி ச. கல்பனா என்பவரின் மாமனார் திரு ராமக்கோன் என்பவரால் திருமதி ச. கல்பனா என்பவரின் பெயரில் கதவு எண் 9.2.46, 9.2.46A/1A. 9.2.46A/1B, 9.2.46A/1, ஆகிய நான்கு கதவிலக்கங்கள் நீங்கலாக கதவு எண்கள். 9.2.46A/1C மற்றும் 9.2.46A/1D ஆகிய கதவு எண்களுக்கு வத்தலகுண்டு பேரூராட்சி வரித்தண்டலர் திரு க. அன்னராஜா என்பவரால் முறைகேடாக வரி ரசீதுகள் வழங்கியது தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளிக்கப்பட்டு மேற்படி புகாரின் தீர்ப்புரையில் மேற்கண்ட கதவு எண்களுக்கு முறைகேடாக வீட்டு வரி ரசீதுகள் வழங்கிய வரித்தண்டலர் மற்றும் செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண் 207/2016நாள். 27.12.2016ல் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி முறையீட்டு மனுதாரரால் மேற்கண்ட கதவு எண்களுக்கு இரசீது வழங்கக் கோரி அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்படி மனுதாரருக்கு அவரின் கணவர் திரு ஆர். நந்தகோபால் என்பவரால் தான செட்டில்மெண்ட் ஆவண எண். 1632/2013/நாள். 30.11.2013ல் கதவு எண். 9.2.46, 9.2.46A/1A, 9.2.46A/1B, 9.2.46A/1 மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு எண்கள் 627, 2624 ஆகியவை தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் முறையீட்டு மனுதாரர் திருமதி. ச. கல்பனா என்பவரால் 07.06.2013ல் வத்தலகுண்டு பேரூராட்சிக்கு தனது பெயருக்கு மேற்படி சொத்துக்களுக்கான பெயர் மாற்றம் கோரி விண்ணப்பம் பெறப்பட்டதாகவும் மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலித்து வத்தலகுண்டு பேரூராட்சி ஆணை எண் 13/2013/அ.3/நாள். 28.06.2013ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டு மேற்படி பெயர் மாற்ற ஆணையினை முறையீட்டு மனுதாரர் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட நான்கு கதவிலக்கங்களுக்கு மட்டும் 06.02.2013ல் சொத்து வரியினை வரித்தண்டலரிடம் ரொக்கமாக செலுத்தி வரி ரசீதும் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் திருமதி ச. கல்பனா, தானமாக சொத்துக்களை பெற்றபின்னர் அவரின் மாமனார் திரு. ராமக்கோன் என்பவரால் வழக்கு தொடரப்பட்ட நிலையில் பேரூராட்சியின் அனுமதியின்றி ஏற்படுத்தப்பட்ட இரண்டு வீடுகளுக்கு முறையாக விண்ணப்பித்து அனுமதி மற்றும் வரி விதிப்பு பெற்றுக் கொள்ளாமல், வரித்தண்டலர் மூலம் முறைகேடாக வேறு நபர்களுக்குரிய சொத்து வரியினை வெள்ளை நிற அசல் இரசீது மற்றும் இளஞ்சிவப்பு நிற நகல் இரசீது ஆகியவைகளை 17.04.2014 அன்று கதவு எண்கள். 9.2.46A/1C மற்றும் 9.2.46A/1D க்கு பெற்றுக் கொண்டுள்ளதாகவும் மேற்கண்ட இரண்டு வீடுகளும் திருமதி ச.கல்பனா என்வரின் பெயரில் சொத்து வரி கேட்பு பதிவேட்டில் இல்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் 2014–15ம் நிதியாண்டிற்கு முறையீட்டு மனுதாரர், சொத்து வரி விதிப்பு பதிவேட்டில் தனது பெயரில் உள்ள நான்கு கதவிலக்கங்களுக்கான வீட்டு வரி மற்றும் இரண்டு

குடிநீர் இணைப்புகளுக்கான வரி ரூ.3,210/-யினை வங்கி வரைவோலை எண் 816124/நாள் 18.07.2014ன் மூலம் செலுத்தியள்ளதாக தெரிவித்துள்ளார்.

2015-16ம் நிதியாண்டிற்கு முறையீட்டு மனுதாரர் மேற்கண்ட நான்கு சொத்து வரி விதிப்புகள் நீங்கலாக முறைகேடாக பெற்ற இரண்டு கதவிலக்கங்களுக்கும் சேர்த்து வீட்டு வரி தொகை ரூ.3620/- வங்கி வரைவோலை எண்.768154/நாள் 0701.2016ன் மூலம் செலுத்தியுள்ளதாகவும் இதில் முறையான நான்கு கதவிலக்கங்களுக்கான தொகை ரூ 2,250/- மட்டும் சொத்து வரி தலைப்பில் வரவு வைக்கப்பட்டும் ஏனைய தொகை ரூ 890/- டேவணித் தொகை தலைப்பில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருமதி ச.கல்பனா என்பவரின் மாமனார் என்பவரால் வழக்கு தொடரப்பட்ட நிலையிலும், சொத்து வரி கேட்பு பதிவேட்டில் இல்லாத கதவு எண்கள் 9.2.46A/1C, மற்றும் 9.2.46A/1D ஆகிய இனங்களுக்கு பேரூராட்சியில் முறையான அனுமதி பெறப்பட்ட விவரங்கள் தேவைப்படுவதால் இது குறித்து முறையீட்டு மனுதாருக்கு உரிய விளக்கம் அளிக்கக் கோரி பேரூராட்சி ந.க.எண். 494/2016/அ.3/நாள். 16.08.2016, 26.08.2016, 14.10.2016, மற்றும் 21.10.2016 ஆகிய தேதிகளில் கோரியும், மேற்படி மனுதாரரால் மேற்கண்ட கதவு எண்களுக்கான உரிய ஆவணங்களோ, அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட நகல்களோ சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி சொத்து சம்பந்தமாக முறையீட்டு மனுதாரருக்கும், அவரின் மாமனார் திரு ராமக்கோன் என்பவருக்கும் திண்டுக்கல் மாவட்ட சார்நிலை நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.No. 342/2013ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதால் இதன் பொருட்டு சொத்து வரி கேட்பு பதிவேட்டில் மேற்படி நபரின் பெயரில் இல்லாத கதவு எண்களுக்கு 2015-16ம் ஆண்டிற்கு முறையீட்டு மனுதாரரால் தொகை செலுத்தப்பட்டு டேவணித் தொகை தலைப்பில் உள்ள தொகையினை உரிய விண்ணப்பம் அளித்து திரும்ப பெற்றுக் கொள்ள பேரூராட்சி அலுவலக 05.05.2017ம் நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் தானமாக பெற்ற சொத்துக்களுக்கான ஆவண நகல் மற்றும் இதர ஆவண நகல்களையும் இணைத்து பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இதில் முறையீட்டு மனுதாரர் ஏற்கனவே தனது பெயரில் பேரூராட்சி சொத்து வரி விதிப்பு பதிவேட்டில் இல்லாத இரண்டு கதவு எண்களுக்கான வரி இரசீதினை முறைகேடாக பெற்றது சம்பந்தமாக திரு ராமக்கோன் என்பவரால் இம்முறையன்ற நடுவத்தில் அளிக்கப்பட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீண்டும் மேற்படி மனுதாரர் அதே வீடுகளுக்கு வீட்டு வரி இரசீது வழங்க கோரி மனுவினை சமர்ப்பித்துள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் மேற்படி சொத்து சம்பந்தமாக முறையீட்டு மனுதாரருக்கும் அவரின் மாமனார் திரு ராமக்கோன் என்பவருக்கும் திண்டுக்கல் சார்நிலை நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.No. 343/2013 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரர் கோரியுள்ள வீடுகளுக்கான வரி விதிப்பு

பேரூராட்சி சொத்து வரி விதிப்பு பதிவேட்டில் முறையிட்டு மனுதாரரின் பெயரில் இல்லை எனவும், இதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க கோரியும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாலும், பேரூராட்சி சொத்து வரி விதிப்பு பதிவேட்டில் முறையீட்டு மனுதாரர் பெயரில் மனுதாரர் வீட்டு வரி அசல் ரசீது கோரியுள்ள மேற்படி கதவு எண்களுக்கான வரி விதிப்புகள் இல்லாத நிலையில் மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக ஆணை பிறப்பிக்க இயலாது. மேலும் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உரிய ஆவணங்களை, வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலரிடம் விண்ணப்பித்து தீர்வு காணவும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

மேலும் இப்பொருள் சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எண்.207/2016/நாள்.27.12.2016ன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்க சமர்ப்பிக்கத் தெரிவித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூலை, திங்கள் 09 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

13/7/18

பெறுநர்:

1. திருமதி. ச. [illegible],
   9/2/46, நடுத்தெரு அக்ரஹாரம்,
   வத்தலகுண்டு,
   நிலக்கோட்டை வட்டம்,
   திண்டுக்கல் மாவட்டம் – 624 202.
2. செயல் அலுவலர்,
   வத்தலகுண்டு பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
   திண்டுக்கல்.
4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   குறளகம், சென்னை –108.

13/7/18